கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **04.06.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை உற்பத்தி செய்யும் செயல் திறன் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூச்சியியல் துறை பூச்சிக்கொல்லிகளை மட்டும் உபயோகப்படுத்தாமல் மற்ற வழிமுறைகளை உபயோகப்படுத்தி பூச்சிகளை பாதிப்பை குறைக்கும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு வழிமுறைகளை விவசாயிகளிடையே கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் மற்ற வழிமுறைகளுடன் உயிரியல் கட்டுப்பாடு மிக முக்கிய அங்கமாகும். குறிப்பாக அயல் நாட்டில் இருந்து வந்து நமது பயிர்களில் பாதிப்பை உண்டாக்கிய பப்பாளி மாவுப் பூச்சி, மரவள்ளி மாவுப்பூச்சி ஆகியவற்றை கட்டுபடுத்தியதில் உயிரியல் கட்டுப்பாடு காரணிகளின் பங்கு மிக முக்கியம் ஆகும்.

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை விவசாயிகள் உபயோகிக்கும் பொழுது பூச்சிக்கொல்லி மருந்துகளின் அளவை குறைப்பதுடன் மட்டுமல்லாமல் வயலில் இயற்கை எதிரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலும். குறிப்பாக முட்டை ஒட்டுண்ணிகள், புழு ஒட்டுண்ணிகள், பூச்சிகளைக் கொல்லும் நுண்ணுயிரிகள் ஆகியவற்றை உபயோகப்படுத்தி விவசாயிகள் பூச்சிகளின் பாதிப்பை கட்டுக்குள் கொண்டு வரலாம். சரியான சமயத்தில் இவற்றை உபயோகிப்பதன் மூலம் பூச்சி பாதிப்பை குறைக்க இயலும்.

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் பெரும்பாலும் வேளாண்மை துறை மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்களில் மட்டும் கிடைப்பதால் விவசாயிகள் அதிக அளவு உபயோகபடுத்துவதில்லை. இவற்றை விவசாயிகள் சிறு குழுக்களாக அமைத்து அவர்களே உற்பத்தி செய்யும் பொழுது உற்பத்தி செலவு குறைப்பதோடு மட்டுமல்லாமல் தங்கள் வயலுக்கு தேவையான பொழுது இந்த உயிரியல் காரணிகளை வயலில் விடுவதின் மூலம் பூச்சிகளின் தாக்கத்தை வெகுவாக குறைக்கலாம்.

இதனை கருத்தில் கொண்டு விவசாயிகளிடையே உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை உற்பத்தி செய்தல் மற்றும் உபயோகப்படுத்தும் வழிமுறைகளை கொண்டு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூச்சியியல் துறை மற்றும் இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம், ஹைதிரபாத் இணைந்து ஆதி திராவிட இளைஞர்களுக்கு ஜூன் மாதம் இரண்டாவது வாரம் ஐந்து நாள் பயிற்சி நடத்த உள்ளது. இந்த பயிற்சியில் உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டு காரணிகளை உற்பத்தி செய்யும் வழிமுறைகள் மற்றும் அவற்றை வயலில் உபயோகப்படுத்தும் வழிமுறைகள் ஆகியவை விளக்கப்பட உள்ளது. இதில் பயிற்சியில் பங்கு பெற வயது வரம்பு 25 – 35 ஆகும். ஐந்து நாட்கள் தங்கும் மற்றும் உணவு செலவு இந்த திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிறது. இதில் 25 விவசாயிகள் மட்டுமே பங்கு பெற முடியும் என்பதினால் விவசாயிகள் தங்கள் பெயரை உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். தாங்கள் entomology@tnau.ac.in மின்னஞ்சலுக்கு தங்கள் பெயர் மற்றும் முகவரியை உரிய ஆவணங்களை அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*